# மகிழ்ச்சி

**MAGIZHCHI MAGAZINE**

**MAY 2024**



## திருப்தியாக்கும் ஆண்டவர்


**C.S.I. TAMIL CHURCH SHARJAH**

The United Arab Emirates,

Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com

For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 5 |
| திருமறை தியானம் | 7 |
| பெண்கள் பகுதி | 9 |
| Participating in God's work | 12 |
| அறிந்து கொள்வோம் | 14 |
| இனிய இல்லறம் | 15 |
| Church History | 19 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 22 |
| Kids Corner | 23 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 25 |
| Daily Bible Reading | 27 |
| ஆராதனை தியானப் பொருள் | 28 |



மகிழ்ச்சி

மே - 2024



# From the Presbyter's Desk

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே

மீட்பரும் இரட்சகருமாகிய உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மை பாதுகாத்து, பராமரித்து, நன்மையினால் திருப்தியாக்கி வழிநடத்தி வந்துள்ளார் ஆண்டவருக்கு நாம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துவோம்.

கடந்த April 1-ம் தேதி முதல் April 5-ம் தேதி வரை நம்முடைய ஆலயத்தில் வைத்து V.B.S. நடைபெற்றது, April 6-ம் தேதி Women's Association Ajman னில் வைத்து இறுதி நாள் நிகழ்வு நடைபெற்றது. பிள்ளைகள் உற்சாகமாய் பங்கு கொண்டு கற்றுக்கொண்ட காரியங்களை நமக்கு மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தினார்கள், பிள்ளைகளை உற்சாகமாய் அனுப்பி வைத்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் மற்றும் இந்த V.B.S ல் உற்சாகமாய் பங்கு பெற்ற teachers,

volunteers, sponsors அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு Children Summer Special (C.S.S.) Dubai குழு மூலமாக V.B.S. சிறப்பாக நடை பெற்றது அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டின் V.B.S. யை மிக சிறப்பாக நேரம் பாராது திட்டமட்டு அர்ப்பனிப்போடு பொறுப்பெடுத்து செய்த Mrs.Nancy Augustine அம்மா அவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

ஆண்டவருக்கு சித்தமானால் இந்த மாதம் மே 19-ம் தேதி திருச்சபையின் வருடாந்திர பொதுக் குழு கூட்டம் நடைபெற உள்ளது. திருச்சபையின் ஊழியங்களை நாம் தொடர்ந்து செய்ய தேவையான உற்சாகத்தையும், ஆலோசனையும் தந்து உதவுங்கள். மேலும் புதிய முயற்சிகளை சிந்தித்து திட்டமிட உங்களது ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் தாருங்கள். இக்கூட்டம் சிறப்பாக நடைபெற அனைவரும் ஜெபத்துடன் கலந்து கொள்ளுங்கள். கடவுளுடைய கிருபை நம்மோடு இருப்பதாக.

இறைபணியில்
அருள்திரு. J.ஜான் ஜெபலின் ஜோஸ்
☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com





# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்த்தரை நான் என் வாயினால் மிகவும் துதித்து, அநேகர் நடுவிலே அவரைப் புகழுவேன். சங்கீதம் 109:30 என்று சங்கீதக்காரன் துதித்து புகழ்வது போல் நாமும் கடந்த மாதம் முழுவதும் நம்மை வழுவாது காத்த தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்போம். குறிப்பாக கடந்த மாதம் UAE தேசமெங்கும் பெருவெள்ளம் சூழ்ந்த நிலை, நமது திருச்சபையிலும் அநேக குடும்பத்தில் பாதிப்புகள், சுகவீனங்கள் காணப்பட்டன. இவையெல்லாவற்றின் மத்தியிலும் ஆண்டவர் போதுமானவராக இருந்தார், ஒவ்வொருவருடைய ஜீவனையும் பாதுகாத்தார். அதற்காக ஆண்டவரை துதித்து புகழுவோம்.

இந்த வருட விடுமுறை வேதாகமப் பள்ளி கடந்த ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 5-ம் தேதி வரை நமது ஆலயத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. நமது திருச்சபை, AG ஷார்ஜா தமிழ் திருச்சபை, ANGLICAN திருச்சபை உட்பட பல்வேறு திருச்சபைகளை சார்ந்த சுமார் 300 குழந்தைகள் இதில் பங்கேற்றனர். இறுதி நாள் நிகழ்வுகள் அஜ்மான் பகுதியிலுள்ள "UMM AL MOUMINEEN WOMEM'S ASSOCIATION" ல் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 6 தேதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த வருட விடுமுறை வேதாகமப் பள்ளி, CSS TEAM DUBAI அதன் பொறுப்பாளர் MR. NIKHIL GEORGE தலைமையில் ஒரு குழுவாக இணைந்து "FOOD TRUCK PARTY" என்ற கருப்பொருளில் நடைபெற்றது. நமது திருச்சபையின் VBS COORDINATOR ஆக MRS. NANCY AUGUSTINE அவர்கள் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாக செயல்பட்டார்கள். திருச்சபையின் நிர்வாக் குழுவின் சார்பில் CSS TEAM DUBAI, MRS. NANCY AUGUSTINE, TEACHERS & VOLUNTEERS ஆகிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கர்த்தருக்குச் சித்தமானால் வருகின்ற மே மாதம் 19-ம் தேதி நமது திருச்சபையின் 18-வது வருடாந்திரப் பொதுக்குழு கூட்டம் (AGM), நடத்த நிர்வாகக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த கூட்டத்தில் அனைவரும் பங்குபெற்று நமது திருச்சபையின் வளர்ச்சிக்குத் தேவையான நல் ஆலோசனைகளை பகிர்ந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

புதிய காலாண்டிற்குள்ளாய் பிள்ளைகள் கடந்து செல்ல தேவன் பாராட்டின கிருபை இரக்கங்களுக்காய் அவருக்கு நாம் நன்றிகளை ஏறெடுப்போம். "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு." என்ற நீதிமொழிகள் 9:10 ன் படி நம் பிள்ளைகள் கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு வளர ஏற்ற சூழ்நிலைகள் அமைய திருச்சபையாய் இணைந்து ஜெபிப்போம்.

தேவன் தாமே நம்மனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

திருச்சபை ஊழியத்தில்
**ஸ்டீபன் குணசேகர்**

☎ +971 58 5896 975



# திருப்தியாக்கும் ஆண்டவர்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய இன்ப நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை நான் பகிர்ந்து கொள்கிறேன்.

அவர்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழு கூடைநிறைய எடுத்தார்கள். (மாற்கு 8:8)

**1. ஒன்றுமில்லாமையில் ஆசீர்வதிப்பவர் :**

மாற்கு 8:1ல் ஜனங்கள் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாதிருக்கிறபோது என்று வாசிக்கிறோம். ஜனங்களுக்கு ஒன்றுமே சாப்பிட இல்லை, ஆனால் இயேசு இருக்கிறார் ஒன்றுமில்லாமையை இல்லாமையாக்கும் கர்த்தர். ஒன்றுமே இல்லை, எல்லாம் தீர்ந்து போன நிலைமை, கையிலும் இல்லை, பையிலும் இல்லை, வியாதிக்கு இனிமேல் குணம் கிடைக்க வாய்ப்பே இல்லை, வேலை இல்லை, பெலன் இல்லை, பதவி உயர்வு என்ற பேச்சுக்கே இடம் இல்லை போன்ற இல்லாமைக்குள் கடந்து வந்திருக்கோம, நம் ஆண்டவர் வனாந்தரத்தில் வழியை உண்டாக்கக்கூடியவர், அவாந்தர வழியிலே ஆறுகளை உண்டாக்கக் கூடியவர், உலகம் முடிந்தது என்று கணக்கிடலாம் ஆனால் என்னால் முடியாத காரியம் ஒன்று உண்டோ என்று கர்த்தர் கேட்கிறார். கடவுளால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. என்னால் முடியும் என்ற நிலையிலிருந்து எழுந்து, ஆண்டவரே என்னில் ஒன்றும் இல்லை என்று அவரிடம் வரும்பொழுது கடவுள் ஒன்றும் இல்லாமையிலிருந்து ஆசிர்வதிப்பார். கேரியாத் ஆறு வற்றி போனது, ஆனால் விதவையின் வீட்டுப் பானையின்

மாவும், கலசத்தின் எண்ணெயும் வற்றவில்லை. உன் ஒன்றுமில்லாமையில் ஆசீர்வதிக்கிறவர் கர்த்தர்.

## 2.பரிதபிக்கின்ற ஆண்டவர் :

மாற்கு 8:2ல் ஜனங்களுக்காக பரிதபிக்கிறேன் என்கிறார் ஆண்டவர். ஜனங்கள் ஒன்றுமில்லாதிருப்பதைக் கண்டு பரிதபிக்கிறேன், சுயபெலத்தால், மாம்சீகத்தால் இல்லாமை என்ற நிலைக்கு வந்திருந்தாலும் அவன் என் பிள்ளை நான் அவர்களுக்காக பரிதபிக்கிறேன். அவர்களை பரிகரிக்கவோ, பரிகாசிக்கவோ செய்யாத ஆண்டவர் நம் இல்லாமையைக் கண்டு, இழிநிலையைக் கண்டு உலகம் பரிகாசம் தான் செய்யும், ஒருவேளை உதட்டளவிலான ஐயோ பாவம் என்ற பிரயோஜனமில்லாத வார்த்தையால் பரிதபிக்கலாம். ஆனால் கடவுளோ நம் மீது அளவுகடந்த இரக்கம் கொண்டு உனக்கு நன்மை செய்யும் முகமாய் உனக்காய் பரிதபிக்கிறவர். சிம்சோன் பாவத்திலே விழுந்து வேதனையான பெலன் இல்லாத வேளையிலும் அவனை பரிகாசிக்காது பரிதபிக்கிறவாய் அவனுக்கு பெலன் அருளினார். கவலைப்படாதே கர்த்தர் உனக்கு இறங்கி பரிபூரணத் திருப்தியை கட்டளையிடுவார்.

## 3. வழியை குறித்து கவலைப்படுபவர் :

மாற்கு 8:3 “நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டுற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்து போவார்களே என்றார்” ஜனங்களின் வழியை குறித்த கவலைமாத்திரமல்ல கவலையோடுள்ள செயல்பாடும் கரிசனையையும் உடையவர். நம் வாழ்க்கை பயணத்தின் வழியிலே அக்கறையுள்ளவர். நமது வழியிலே உள்ள மேடு பள்ளங்களை அறிந்தவர். நமது பிள்ளைகளின் நலனுக்காக நன்மையான வழியில் அக்கரையை எதிர்நோக்கி இருக்கின்ற எதிர்காலத்தின் வழிகளைக் குறித்து கவலைப்படுபவர். கலங்காதே திகையாதே வழி எப்படியிருக்குமோ என கலங்க வேண்டியதில்லை. வழியாகிய கர்த்தர் விழிவைத்து நம் வழியை காப்பார், அவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை, நமது வழிகளில் எல்லாம் தம்முடைய தூதர்களை நமக்கு பாதுகாவலர்களாக அனுப்புவார். எதிர்காலத்தை குறித்து, நாளையை குறித்ததான வழிகளை குறித்து கலங்காதே ஒன்றுமில்லாமையிலே ஆசீர்வதிக்கும் கடவுள் நம் மீது பரிதாபம் கொண்டு பரிகாரம் செய்வார். அவர் நம் பாதையைக் காப்பார், பரிபூரண திருப்தியால் நிரப்புவார். கடவுள் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# ரூத்

நகோமியின் கணவரும் இரண்டு மகன்களும் மோவாபில் மரித்துப்போய் நகோமியும்,மருமக்கள் மோவாபிய பெண்கள் இருவரும் ஆக மூன்று பேரும் விதவையானார்கள். கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று நகோமி மோவாப் தேசத்திலே கேள்விப்பட்டு பெத்லெகேமுக்கு திரும்பி வர ஆயத்தப்படும்போது, இரண்டு மருமக்களையும் மோவாபிலுள்ள அவர்கள் தாய் வீட்டிற்கு போகக் கூறும் போது ஓர்பாள் மாமியை முத்தமிட்டுப்போனாள். ரூத்தோ அவளை விடாமல் பற்றி கொண்டாள். அவள் இதோ,உன் சகோதரி தன் ஜனங்களிடத்திற்கும் தன் தேவர்களிடத்திற்கும் திரும்பிப் போய்விட்டாளே, நீயும் உன் சகோதரியைப் போல திரும்பிப் போ என்றாள்.

அதற்கு ரூத் “நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்குமிடத்திலேயே தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன்,நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து அங்கே அடக்கம் பண்ணப்படுவேன். மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகும் அதற்கு

அதிகமாகவும் எனக்கு செய்யக்கடவர்" என்றாள். அவள் தன்னோடு வர மன உறுதியாயிருந்ததை கண்டு, அப்புறம் அதைக் குறித்து ஒன்றும் பேசவில்லை என்று ரூத்1:1618 வரைப் பார்க்கிறோம். பிறகு இருவரும் பெத்லெகேமுக்கு வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் வந்தார்கள்.

இருவருக்குள்ளும்நல்லபுரிந்துகொள்ளுதல்,ஐக்கியம்,அன்பு,ஒற்றுமை இருந்தது.அதனால் தான் பிறகு வீடு கட்டப்படுகிறதை பார்க்கிறோம். நீதி 14:1 படி புத்தியுள்ள ஸ்தீரி தன் வீட்டைக் காட்டுகிறாள் என்பது போல திகழ்ந்தாள்.

ரூத், வயல்வெளியில் போய் அறுக்கிறவர்கள் பிறகே பொறுக்கினாள், தற்செயலாய் அவளுக்கு நேரிட்ட அந்த வயல் நிலம் எலிமெலேக்கின் வம்சத்தானாகிய போவாசுடையதாய் இருந்தது.போவாசும் வேலைக்காரர் மூலம் ரூத் யார் என்பதை அறிந்தவுடன் தயவு காட்டினான். பின்னும் மகளே நீ வேற வயலுக்கு போகாமல் என் ஊழியக்காரரோடே இரு. ஒருவரும் உன்னைத் தொடாத படிக்கு வேலைக்காரருக்கு கட்டளை இடுகிறேன். தாகம் எடுத்தால் தண்ணீர்க் குடங்களண்டைக்குப் போய் குடிக்கலாம்என்றுசொல்லிதயைகாட்டினான்.அவளைவிசாரித்தான்,உன் செய்கைக்கு தக்கப் பலனை கர்த்தர் கட்டளையிடுவார். கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான் போவாஸ்.

ரூத் முகங்குப்புற விழுந்து வணங்கி,அந்நிய தேசத்தாள் ஆகிய என்னை விசாரிக்க தயை காண்பிக்க இது எதனால் கிடைத்தது. உம்முடைய வேலைக்காரர்களில் ஒருத்திக்கு நான் சமானமாய் இராவிட்டாலும் நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உமது அடியாளோடு பட்சமாய் பேசினீரே என்றாள். பின்னும் தன் நன்றியைத் தெரிவித்து தான் போவாஸின் வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமமாய் இல்லை என்று தன்னை தாழ்த்தினாள்.கோதுமை பொறுக்குகிற வேலையை அற்பமாய் நினைக்காமல் தினமும் வயலுக்கு சென்று பொறுக்கி எடுத்து சென்றாள்.சாப்பிட வறுத்த கோதுமை எஜமான் கொடுக்கும் போது தானும் சாப்பிட்டு மீதத்தை கொண்டு போய் மாமிக்கும் கொடுத்தாள். அவளுக்குள் தாழ்மை இருந்தது.வேலை செய்து சாப்பிடுகிற மகளாய், சோம்பேறியாய் இல்லாமல் சுறுசுறுப்பு உள்ளவளாயும் காணப்பட்டாள். ரூத் 3:6 படி மாமி

தனக்கு கற்பித்தபடி எல்லாம் ரூத் செய்தாள்.ரூத் 3:10,11 படி நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக. ஐஸ்வரியமான, தரித்திரமான வாலிபர் பிறகே போகாமல் இருந்ததால் உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் பிந்தின நாட்களும் உத்தமமாய் இருக்கிறது.நீ குணசாலி என்பதை ஊரெல்லாம் அறிவார்கள், என்று போவாஸ் கூறினான். எபி 3:14படி நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருக்க கடவோம் என்று கூறுகிறதை போல ரூத் முடிவு பரியந்தம் உறுதியை கர்த்தரை பின்பற்றி பரிசுத்தமாய், குணசாலியாய் காணப்பட்டாள்.போவாஸ் ரூத்தை விவாகம் செய்தான். அவளும் ஒரு குமாரனை பெற்று ஓபேத் என்று பெரிட்டாள். ஓபேத் ஈசாயைப் பெற்றான். ஈசாய் தாவீதைப் பெற்றான்.தாவீதின் சந்ததியிலே இயேசுவானவர் பிறக்குகிறதையும் பார்க்கிறோம்.

தாழ்மை,விடாமுயற்சி சுறுசுறுப்பாய் உழைக்கிறவளாய், மாமியாரை தாயைப் போல நேசித்து கணம் பண்ணி கர்த்தருக்குள்ளான அவருடைய ஆலோசனையை கேட்டு குணசாலியாய் இருந்தாள். தாழ்மையுள்ளவளாய் காணப்பட்டதால், ஐசுவரியவானாகிய போவாசின் மனைவியாய் மாறினாள். இத்தகைய நற்குணம் உள்ளவர்களாக நாமும் திகழ வேண்டும். கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

**J.ஜெனு ஜெபலின்**
ஆயர் அம்மா





# Participating in God's work

We all work to earn a living. Some of us enjoy the work we do, some of us just work for the sake of working. In both instances the goal is common to earn a living. We make all efforts to report on time, work with utmost concentration and try to bring forth the best. Have we ever shown this dedication and commitment for Gods work? Do you think it is important to participate in God's work? It is the calling of every Christian to continue to do the work of Jesus in the world.

God can and will use Christians with ordinary jobs to live out and tell His redemptive story among those they work with. Ex 36:1 says So Bezalel, Oholiab and every skilled person to whom the Lord has given skill and ability to know how to carry out all the work of constructing the sanctuary are to do the work just as the Lord has commanded."

How can we serve the Lord through our ordinary jobs? We can:

1) Point people to Jesus through our words and good deeds, -God

uses those who are in full-time vocational ministry to teach, preach, and share the gospel, but that is only a small percentage of Christians. The rest of us have already been scattered by God in every career field as His coworkers to be able to scatter the seeds. We might not be gifted evangelists. We might not be able to talk openly about Jesus while we are hard at work, earning our paychecks. However, all Christians are able to give a reason for the hope we have in Christ so that others will ask us to explain it (1 Peter 3:15)


2) Participate with God as His coworkers to meet people's needs- In addition to intentionally living out our faith in Christ at work among our bosses, coworkers, employees, and customers, we can be used as a vessel through which God will work. He gave His children a variety of skills and abilities to meet the full spectrum of human needs; i.e., physical, emotional, mental, and spiritual. God provides for us by equipping human workers

3) Bring God's presence into every sphere of life. "The earth is the Lord's and everything in it."Ps 24:1We have been redeemed so that we can go into all areas of society to bring Jesus's message into our workplaces through our words and actions. Satan, the flesh, and the world may have corrupted much of what we see around us, at least temporarily. But since it all belongs to God, we can be salt and light by doing things the way they were meant to be done. Each of us can make an impact on the people to whom we are called to serve in Jesus's name.

Our calling is to reflect and project the real meaning of God in our work place through our simple deeds and actions and fulfill our pledge as the children of God to try to be like him and relive the promise in Ephesians 2:10 For we are His workmanship, created in Christ Jesus for good works, which God prepared beforehand that we should walk in them.

Contributed By

*Nancy Augustine*



# மிஷனரி GEORGE MULLER

ஜார்ஜ் முல்லர் வேதாகமத்தை முழுவதுமாக 200 முறைகள் வாசித்திருக்கிறார். அதிலும் 100 முறை முழங்காலில் இருந்தே வாசித்திருக்கிறார். விசுவாசத்திலே வெற்றி கண்டவர், அனாதைகளின் அருமை தந்தை என்று போற்றப்படுபவர். ஜார்ஜ் முல்லர் நிறுவிய 117 அனாதை இல்லங்களில் 1,21,683 மாணவ மாணவியர் பயின்றனர். வேத அறிவு நிறுவனங்களும், பள்ளிக்கூடங்களும் இவரால் நிறுவப்பட்டது. தன்னுடைய 70 வயதிற்குப் பிறகு மிஷினரிப் பயணங்களை மேற்கொண்டார். 20 லட்சம் மைல்களைக் கடந்து சுமார் 30 லட்சம் மக்களுக்கு ஆண்டவரின் நற்செய்தியை எடுத்துரைத்தார். உலகமெங்கும் இந்த நற்செய்தியை தொடர்ந்து அறிவிக்க 189 மிஷனரிகளை ஏற்படுத்தினார். எல்லாத் தேவைகளுக்கும் கடவுளையே தேடினார். தனது 93 ஆம் வயதிலே நித்திய வாழ்வை பெற்றார்.



# குழந்தை வளர்ப்பு – 3

**"பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்."** (கொலோசெயர் 3:21).

**நேரத்தை ஒதுக்கி நேசத்தைப் பெறுங்கள்**

எப்போதோ படித்த ஒரு புதுக்கவிதை நினைவிற்கு வருகிறது.

குழந்தையாயிருக்கையில் பெற்றோர்கள் அவனைக்
குழந்தைகள் காப்பகத்தில் சேர்த்தனர்
குழந்தை பெரியவனானதும் பெற்றோர்களை அவன்
முதியோர்கள் இல்லத்தில் சேர்த்தான்.

குழந்தைக் காப்பகத்தில் விடப்பட்ட பிள்ளையிடம் பெற்றோர்கள் பாசத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

பொருளாதாரத் தேவைகள் மிகுதியான இந்த நாட்களில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போகத்தான் வேண்டியதுள்ளது. ஆனால் பெற்ற பிள்ளைகளைக் கவனிப்பதற்கு வேலை தடையாக இருக்கக் கூடாது.

“பிள்ளைகளுக்காகத்தானே வேலைக்குப் போகிறேன்” என்று நீங்கள் கூறினாலும், பிள்ளைகளைக் கவனிப்பதும் உங்கள் கடமைதான் என்பதை மறவாதீர்கள். இந்த இடத்தில்தான் கூட்டுக் குடும்பத்தின் சிறப்பு மேலோங்கி நிற்கிறது.

பிள்ளைகளுக்காக உங்களுடைய நேரத்தை ஒதுக்குவது அவசியம். பிள்ளைகளுக்காக உங்களுடைய ஆசாபாசங்களைத் தியாகம் செய்வது நல்லது. பிள்ளைகளுக்குப் பணம் சேர்த்துவைப்பதைவிட, அவர்களிடம் சிறந்த குணங்களை உருவாக்குவதே சிறந்தது. குணமில்லாப் பிள்ளைக்குப் பணமும் சொத்தும் சேர்த்துவைப்பது வீண்; கையில் கிடைக்கும் பணத்தை நீங்கள் நினைப்பதை விட அதிசீக்கிரமே அழித்துவிடுவான்.

வெள்ளித்திரையிலும், சின்னத் திரையிலும், கணினித் திரையிலும், தொலைபேசியிலும், செல்போன்களிலும், அழகு நிலையங்களிலும், நண்பர்கள் கூட்டத்திலும், கிளப்களிலும் (Clubs) நேரத்தைத் தொலைத்து விட்டு, பிள்ளைகளைக் கவனிக்க, வளர்க்க நேரமில்லை என்று அங்கலாய் கிறவர்களுக்கு மன்னிப்பில்லை.

ஒரு நாள் ஒரு சிறுவன் தனது தந்தை வீட்டுக்கு வரும் வரை ஆவலோடு காத்திருந்தான். வந்தவுடன் தன்னுடைய தந்தையிடம் கேட்டான். “அப்பா உங்களுக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பளம்?” என்று கேட்டான்.

மகனுடைய கேள்வி தகப்பனுக்கு ஆச்சரியமாகவும் அதே சமயம் எரிச்சலூட்டுவதாகவும் இருந்தது. அவர் கூறினார். “உன்னுடைய அம்மாவிற்கே என்னுடைய சம்பளம் என்னவென்று சொன்னதில்லை; உன் வேலையைப் பார்; நான் களைப்பாக இருக்கிறேன்.”

பையன், “சொல்லுங்கப்பா, ஒரு மணி நேரத்திற்கு உங்களுக்கு எவ்வளவு சம்பளம்?” என்று பிடிவாதமாகக் கேட்டான்.

மகனுடைய கேள்விக்கு எதையாவது சொல்லுவோம் என்றெண்ணி, “ஒருமணிக்கு சுமார் 100 ரூபாய்” என்றார் தந்தை.

“அப்படியா? சரி, எனக்கு ஒரு பத்து ரூபாய் கொடுக்கமுடியுமா?” என்று பையன் கேட்டான்.

தந்தைக்குக் கோபம் தலைக்கேறியது. “போ... போய்த் தூங்கு; என்னைத் தொந்தரவு செய்யாதே” என்று அலறினார். பின்னர், தந்தை தனது கோபத்திற்காக வருத்தப்பட்டார். “ஒரு வேளை ஏதாவது புத்தகம் அல்லது நோட்டு வாங்குவதாகக் கேட்டிருப்பானோ; தேவையில்லாமல் சிறு

பிள்ளையின் உள்ளத்தைக் காயப்படுத்திவிட்டோமே" என்று எண்ணிக் கொண்டே பையனின் படுக்கை அருகே சென்று, "என்னப்பா தூங்கி விட்டாயா?" என்று கேட்டார்.

பையன் எழுந்து, "இல்லையப்பா, இன்னும் தூங்கவில்லை; என்ன விஷயம்?" என்றான்.

"இந்தா, நீ கேட்ட பத்து ரூபாய்" என்று ரூபாயை நீட்டினார்.

"தேங்ஸ்ப்பா" என்று கூறிக்கொண்டே தலையணிக்கடியால் துளாவி, அதனடியில் இருந்த பணத்தை எடுத்தான்.

"அப்பா எனக்குக் கொடுக்க உங்கள் கையில் வைத்திருக்கும் 10 ரூபாயையும், நான் சேர்த்துவைத்திருக்கும் 90 ரூபாவையும் சேர்த்து மொத்தம் 100 ரூபாய் இருக்கிறது; இது உங்களுடைய ஒருமணி நேர சம்பளம். தயவு செய்து இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஒருமணி நேரத்தை எனக்குத் தருவீர்களா? ஒருமணி நேரம் என்னோடு கழிப்பீர்களா?" என்று கேட்டான். தந்தை அதிர்ந்துபோனார்

உங்கள் பிள்ளைகள், நீங்கள் அவர்களுக்கு அளிக்கும் வெகுமதி களைவிட பணத்தைவிட உங்களுடன் கழிக்கும் நேரத்தைத் தான் வெகுவாக விரும்புகிறார்கள்; அவர்களுடன் கழிக்கும் நேரத்திற்கு ஈடானது வேறில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

ஒரு தாய் இப்படிக் கூறினார்: என் குழந்தையிடமுள்ள அன்பினால், என்னுடைய குழந்தையுடன் தவழ்ந்தேன், அவன் தத்தித்தத்தி நடக்கும் பொழுது மெதுவாக உடன் நடந்தேன்; அவன் குழந்தையாக ஓடும்பொழுது நானும் உடன் ஓடினேன்; அதன்பின் அவன் வாலிபத்தில் அடியெடுத்து நடப்பதை ஒதுங்கி நின்று பெருமையாகப் பா பார்த்தேன். இது எவ்வளவு உண்மையான வார்த்தைகள்!

குழந்தையின் ஒவ்வொரு கட்டத்திலும், அதனுடன் தனது நேரத்தை செலவிட்டு, ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்து, நற்பழக்கங்களைப் பயிற்றுவித்து. ஆவிக்குரிய ஜீவியத்தில் வழிநடத்திய பெற்றோர்களால் தான் பிள்ளைகள் வளர்ந்து தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளவேண்டிய வாலிபர்களாகச் சமுதாயத்தில் பிரவேசிக்கும் பொழுது ஒதுங்கி நின்று பெருமைப்படமுடியும். இல்லையென்றால், எந்த நேரத்தில் எந்தப் பிரச்சனையைக் கொண்டு வருவானோ(ளோ) என்ற அச்சத்தில், அனுதினமும் "நெருப்பை வயிற்றில் கட்டிக் கொண்டு" திரியும் பெற்றோர்களாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

தனது தந்தையைப் பற்றிக் கூறும் கிளாரன்ஸ் பி.கெல்லன், “வாழ்க்கையை எப்படி வாழ்வது என்று என்னுடைய தந்தை எனக்குச் சொல்லிக்கொடுக்கவில்லை, நான் பார்த்துப் படிக்கும் வகையில், தன் வாழ்க்கையை என் கண்முன்னே வாழ்ந்து காட்டினார்” என்று (My father did not teach me how to live; but he lived, and let me watch him to do it Clarence B. Kellan).

இன்றேய பிள்ளைகள் தங்களுக்கு ஆலோசனை அல்லது அறிவுரை கூறுகிறவர்களைவிட, தாங்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரியான மனிதர் களையே விரும்புகிறார்கள். (The children of today like role model to emulate, more than counsellors and advisers).

நீங்கள் உங்களுடைய பிள்ளைகளுக்கு முன்னால் முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?

**நீங்கள் தவறு செய்து மாட்டிக்கொண்டால்**

ஏதோ ஒரு தருணத்தில் நீங்கள் ஏதாவது தவறு செய்து மாட்டிக்கொண்டால் (உதாரணமாகக் கெட்டவார்த்தை பேசுதல்). அல்லது பிள்ளைகள் செய்யாத தவறுக்காகத் தவறுதலாக அவர்களைத் தண்டித்தால், உங்கள் தவறுக்காகத் தயக்கம் காட்டாமல் வருத்தம் தெரிவிப்பதும் மன்னிப்புக் கேட்பதும்தான் பெருந்தன்மையான பழக்கம். அப்படிப்பட்ட பெருந்தன்மையை உங்கள் செயலினால் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுங்கள்.

நீங்கள் தவறு செய்யும்போது பிள்ளைகளிடம் மாட்டிக்கொண்டால் உங்களுடைய தவறை நியாயப்படுத்த முயலாதீர்கள். தவறை ஒத்துக் கொள்ளுங்கள். உங்கள் தவறுக்காகப் பிள்ளைகளிடம் மன்னிபுக் கேட்பதில் தவறில்லை. இதனால், பெற்றோர்களும் தவறு செய்யக்கூடியவர்கள்தான் என்பதையும், ஆனால் அவர் தங்களுடைய தவறை ஒத்துக்கொண்டு மன்னிப்புக்கேட்கவும் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். இதனால் நீங்கள் அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறீர்கள் (Do not defensive when your child catches you misbehave. When you are caught using bad language, accept that you were wrong. Admit your error and apologize. If you do that, you are teaching your children that parents make mistakes, but they take responsibility and apologize too. These are invaluable qualities to model for your children. -Shalini Mitra in her book "The Art of Successful Parenting.".



# தரங்கம்பாடிக்கு லூத்தரன் மிஷனெரிமாரின் வருகை

### வேற்று மொழிகளைக் கற்றல்

கப்பல் பயணத்தின்போது சீகன்பால்கும், புளுட்சோவும், தங்கள் கைவசம் ஒரு புதிய ஏற்பாட்டை வைத்திருந்தனர். அது ஒரு போர்ச்சுக்கீசிய மொழிபெயர்ப்பு. இவர்களிடம் போர்ச்சுக்கீசிய இலக்கண நூல் ஒன்றும் இருந்தது. இவற்றின் துணைகொண்டு போர்ச்சுக்கீசிய மொழியைக் கற்றுக்கொள்ள முயன்றனர். வாடகை வீட்டில் குடியேறினவுடன் முதல் வேலையாகப் போர்ச்சுக்கீசிய மொழியை மிகுந்த ஆர்வத்தோடு கற்கத் தொடங்கினர். போர்ச்சுக்கீசிய மொழிபேசும் ஒருவனை வேலைக் காரனாக வைத்துக்கொண்டனர். தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள தமிழ் தெரிந்த ஒரு ஆசிரியரை அமர்த்திக் கொண்டனர்.

இந்தியாவுக்கு வந்து சேர்ந்த இரண்டு மாதங்களுக்குள் தங்கள் வீட்டில் சிறியதோர் பள்ளியைத் தொடங்கினர். தரையில் சிறுவர்களுடன் தாங்களும் அமர்ந்து, மணல்மீது எழுத்துக்களை எழுதித் தமிழ் மொழியைப் படிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்டனர். தினசரி நான்கு

மணி நேரம் தமிழ்ச் சொற்களை மனப்பாடம் செய்தனர். தங்களுக்குக் கிடைத்த தமிழ்ச் சுவடிகளையெல்லாம் படித்தனர். சில சமயங்களில் மற்றவர்களைச் சத்தமாய்ப் படிக்கச் சொல்லியும் கேட்டறிந்தனர்.


ஆறு மாத காலம் இவ்வாறு மெய்வருந்தத் தமிழ் மொழியைக் கற்றபின் சீகன்பால்க் தமது அருளுரையை முதன் முறையாகத் தமிழில் செய்தார். சரளமாகத் தமிழ்ப் பேசக் கற்றுக்கொண்டபின், தமிழர்களின் சமய நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் குறித்து விரிவாக விவாதிக்க முற்பட்டார். அச்சமயங்களிலெல்லாம் நற்செய்தியை அறிவிக்கத்தவறியதே இல்லை. அநேகர் நெடுந்தூரம் பயணம் செய்து வந்து, இவருடன் உரையாடினர்.

## இலக்கியப் படைப்புகள்

தமிழ் மொழியை நன்கு கற்றபின், இவ்விரு மிஷனெரிமாரும் தம்மிடம் பயிலும் மாணவர்களுக்கெனப் பாட நூல்களை எழுத முற்பட்டனர். லூத்தர் எழுதிய “சமய வினா விடை” நூலையும், கர்த்தருடைய ஜெபத்தையும் தமிழாக்கம் செய்தனர். அடிப்படைக் கிறிஸ்தவப் போதனைகள் சிலவற்றைச் சிறு ஆய்வுக் கட்டுரைகளாக எழுதி வெளியிட்டனர். சீகன்பால்க் பாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். கற்பதற்கு ஏற்ற சாதனங்கள் பாடல்கள் என்பதைத் தெரிந்தார். சிறிது காலத்திற்குப்பின் துதிப் பாடல்கள் சிலவற்றைச் சிறுவர்கள் பாடுவதற்கெனத் தமிழில் மொழிபெயர்த்தார். தமிழ்க் கீர்த்தனைகள் சிலவற்றையும் இயற்றினார்.

பள்ளிப் பிள்ளைகளுக்குத் தேவையான பாடங்களை உருவாக்கும் பணி மிகவும் மெதுவாக நடந்தது. அச்சமயத்தில் தமிழ் அச்சுக் கூடமோ அல்லது போர்ச்சுக்கீசிய அச்சுக்கூடமோ கிடையாது. அனைத்தும் பனை ஓலைச் சுவடிகளில், எழுத்தாணிகளால் நகல் எழுதப்பட வேண்டிய நிலை இருந்தது. அச்சுக்கூடம் அமைக்க ஐரோப்பாவிலுள்ள சபையாரிடம் உதவி கோரினார். ஆனால் அவர்கள் அருட்பணிக்காகக் கடவுளிடம் வேண்டிக்கொள்வதில்தான் அதிக ஆர்வம் காட்டினர். தங்களுடைய பணத்தால் அருட்பணியைத் தாங்க முன் வரவில்லை. தற்செயலாக அச்சுக்கூடத் தேவையைக் குறித்து இங்கிலாந்து சபையார் கேள்விப்பட்டனர். ஆங்கிலிக்கன் திருச்சபை புதியதாகத் தோற்றுவித்த

“கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்கம்” (S.P.CK.) என்னும் அமைப்பு அச்சகம் அமைக்கும் பணியில் ஆர்வம் காட்டியது. அச்சங்கம் 1711 ல் ஒரு அச்சு இயந்திரம், பயிற்சி பெற்ற ஒரு அச்சுக்கலை வல்லுநர், அச்செழுத்துக்கள், காகிதம், போர்ச்சுக்கீசிய மொழியில் அச்சிடப்பட்டிருந்த 250 புதிய ஏற்பாடுகள், ஓரளவு பணம் ஆகிய அனைத்தையும் அனுப்பியது. ஓராண்டு கடந்தபின்பும் கப்பல், தரங்கம்பாடிக்கு வந்து சேரவில்லை. அந்தக் கப்பல் பிரெஞ்சுக்காரர்களால் பிடிக்கப்பட்டு, பிரேசிலிலுள்ள ரியோடிஜெனீரோவுக்குக் கொண்டு போகப்பட்டது என்ற செய்தி கிடைத்தது. பிரெஞ்சுக்காரருக்கு ஈட்டுத்தொகை செலுத்தியபின் கப்பல் மீட்கப்பட்டு, தரங்கம்பாடிக்கு வந்து கொண்டிருந்தது. கப்பலில் வந்து கொண்டிருந்த அச்சுக்கலை வல்லுநர், கப்பலின் மேல் தட்டிலிருந்து கடலில் தவறி விழுந்து செத்தார். கடைசியாக அச்சு இயந்திரம் தரங்கம்பாடியை வந்து சேர்ந்தது. அவ்வேளையில் அச்சு இயந்திரத்தை இயக்கக்கூடிய டேனிஷ் போர் வீரர் ஒருவரைக் கண்டுபிடித்து, அவர் துணையுடன் சிகன்பால்க் அச்சுச் கூடத்தை நிறுவினார். 1713ல் தமிழ் அச்சு இயந்திரம் ஒன்றும் ஜெர்மனியிலிருந்து அனுப்பப்பட்டது. பணிக்குத் தேவையான நூல்கள் மற்ற இதழ்கள் உற்பத்தி செய்வதற்கு இந்த அச்சகங்கள் பெரிதும் உதவின.



# திருமறையை தெரிந்துகொள்வோம்

யோபு 31-42

1. பரகெயேலின் குமாரன் யார்?
2. அக்கிரமக்காரர் ஒளிந்து கொள்ளத்தக்கதாக எது இல்லை?
3. எலிகூவின் அபேட்சை என்ன?
4. தேவன் எதற்குச் செவி கொடார்?
5. எதை ஆடுமாடுகள் அறியப்படுத்தும்?
6. மாயமுள்ள இருதயத்தார் எதைக் குவித்துக் கொள்ளுகிறார்கள்?
7. தேவனிடத்தில் என்ன உண்டு?
8. தேவன் எதினால் குளிரைக் கொடுக்கிறார்?
9. பூமி எதைப் போல் வேறே ரூபம் கொள்ளும்?
10. திக்குருவி தன் முட்டைகளை எங்கே இடும்?
11. கர்த்தர் எதிலிருந்து யோபுவுக்கு உத்தரவு கொடுத்தார்?
12. எது தும்முகையில் ஒளி வீசும்?
13. லிவியாதான் எதற்காக உண்டு பண்ணப்பட்டது?
14. யோபுவின் சிநேகிதரைக் குறித்து கர்த்தர் சொன்னது என்ன?
15. எப்போது யோபுவின் சிறையிருப்பு மாற்றப்பட்டது?

கடந்த ஏப்ரல் மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Stella Jeshwanth
2. Mrs.Esther Kala Ashok
3. Mrs.Rajini Julius
4. Mrs.Baby Jesudass
5. Mrs.Rubavathi
6. Mrs.Merlin Jabahar
7. Mrs.Selina Stephen
8. Mrs.Kavitha Johnson
9. Mrs.Ruby Jeyaseelan
10. Mrs.Benisha
11. Mrs.Thangamani Anbalagan
12. Mrs.Sheela Hendry

**Children's Corner Colouring**

1. San Hedrin
2. Andrea Elizabet


# KID'S CORNER

## BIBLE BUZZ

Check out **Matthew 4:1-11** and complete the story of Jesus' temptations:

1

Jesus was led by the Spirit into the wilderness. After fasting ______ days and ______ nights, he was hungry.



2

The devil came to tempt Him, saying, "If you are the Son of God, tell these stones to become __________."

Jesus answered, "It is written: 'Man shall not live on __________ alone, but on every word that comes from the mouth of God.

3



The devil tried to tempt ____________ two more times. But ____________ defeated the devil each time by using the Word of God.

Follow Jesus' example and use God's word to defeat temptation.

Hebrews 2:18 NIV says:

"Because He Himself suffered when He was tempted, He is able to

h ___ lp th ___ s ___ wh ___

___ r ___ b ___ ___ ng

t ___ mpt ___ d."

Use the following verses to fill in the blanks on the right:

Proverbs 16:18

Ephesians 4:32

Romans 12:2

When I'm tempted to give up, I can look up Philippians 4:13

When I'm tempted to show off, I can look up ____________

When I'm tempted to be mean, I can look up ____________

When I'm tempted to give in to peer pressure, I can look up ____________

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this month.

50 703 2150




Contributed by:
Vinolyn Mathumaran



# MAZE

Find your way through the wilderness.

# Birthday & Wedding day Celebrants

$1^{st}$ May
MR. S.OBEATH SELWIN
$2^{nd}$ May
MRS. ANDREA KLEMMY
MASTER. MATHURAVAN
$3^{rd}$ May
MR. GODGIL ROBINSON
MRS. JENU JEBALIN JOSE
$4^{th}$ May
MR. GODWIN SANJIV KUMAR
MR. JOHN JOSEPH J.
MR. NELSON.J
$5^{th}$ May
MISS CHRIS BINI B.
MISS DARRYL BRYN ELIZABETH
MISS JENI CHRISELDA
MISS KEREN SEANNA
$6^{th}$ May
MR JENKIN SAMRAJ
MISS SHAANA LILIYA
MRS SHARMILA
$7^{th}$ May
MR NIRMAL JOSE M.
MASTER O.EDWIN SILAS
MR RUBAN JEBADURAI
$8^{th}$ May
MRS AHIYA JACOB
$9^{th}$ May
MRS VITHYA SELVI D.
$10^{th}$ May
MR JINO JERSON
MISS LENORA LEIZEL WESLEY
$11^{th}$ May
MASTER STEVE RYAN
$12^{th}$ May
MASTER DWAYNE MAGNUS
$13^{th}$ May
MASTER ARUL RICHARD
MR SHALOM SILAMBARASAN
$14^{th}$ May
MR T.THOMAS RAJA
MRS W.SHEEBA ALWIN
$15^{th}$ May
MRS BETSY.S
MR JOHN MARKCUS
MISS RIYA JENISHA
$16^{th}$ May
MR BEN CHELATHAI POVAS
MR DAVID STALIN AMOSE
MR JEBASINGH
$18^{th}$ May
MR C.MARTIN
MR DAVID PRAKASH GNANIAH
MR JEYAKUMAR SOLOMON S.
MISS RHEA HENRITA D
MRS S.BABY
MISS SANTINA OLIVIA
$19^{th}$ May
MR A.HENTRY SAMUEL RAJ
$20^{th}$ May
MRS A.JENI PRIYA
MR GLORY DOSS.D
MISS LANIE SHARON K.
MR LEWISH YACUB
MR RASU P.
MRS SHEEBA
MR VINU JOHNSON
$21^{st}$ May
MR DINESH Y.
MR FELIXON NELSON NADAR
MRS KAVITHA PAUL RAJ RAJA
MRS PRIYA SELVABAI C
$22^{nd}$ May
MR BRAINERD RAJA
MRS PRABHA MOHANDASS
$23^{rd}$ May
MR CARDINAL LEO
MASTER SANHEDRIN

24th May
MR DONALD JMES D'SILVA
MRS MARY DANIEL
MASTER RYAN KENNETH

25th May
MR ALEX VIVIN ARUMAINAYAGAM
MR SOLOMON RAJKUMAR R.
MR SUJIN D.
MR WINSTON SURESH

26th May
MRS BRIJITA PRAMILA

27th May
MRS ADELINE SOLOMAN

28th May
MISS SHAMNA

29th May
MR JENITH D.
MISS RAOKHSHNA MAGDEL M.

30th May
MISS JESIMA J.
MRS SUMATHI
MRS TINA JOSEPH S.

## Wedding Anniversary

**1st May**
MR & MRS SELWYN ABRAHAM.M

**4th May**
MR & MRS HENRY VASANTH KUMAR S.

**5th May**
MR & MRS MANUEL RAJ JOHN
MR & MRS THANGA BABU

**6th May**
MR & MRS ALEX JEYARAJ
MR & MRS GILBERT RAJ

**11th May**
MR & MRS DAVID ARUN D.

**12th May**
MR & MRS AMAR VENKATACHALAM

**13th May**
MR & MRS VIMAL RAJKUMAR.S

**14th May**
MR & MRS JAMES WESLY

**15th May**
MR & MRS RAJESH KUMAR C.

**16th May**
MR & MRS EBENEZER JACOB V.
MR & MRS S.SIMEYON

**18th May**
MR & MRS RATHNA SINGH JULIUS S.

**19th May**
MR & MRS JEYARAJ ISREL JOTHIPAUL
MR & MRS DAVID STALIN AMOSE

**20th May**
MR & MRS STEPHEN GUNASEKAR
MR & MRS PRAVEEN JEBAKAR

**21th May**
MR & MRS DINESH Y.

**22th May**
MR & MRS SURESH PITCHAIMANI G.
MR & MRS LEWISH YACUB
MR & MRS A.HENTRY SAMUEL RAJ
MR & MRS JOHN MARKCUS
MR & MRS JACOB SAMUEL

**23th May**
MR & MRS JEYASEELAN JEBARAJ M.
MR & MRS GLORY DOSS.D
MR & MRS MURALI

**24th May**
MR & MRS THOMAS KOILRAJ

**28th May**
MR & MRS DAVID PAUL RAJ

**29th May**
MR & MRS STALIN JOSE. Y

## DAILY BIBLE READING MAY 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 WED | லூக்கா / LUKE 13:1-35 | லூக்கா/ LUKE 14:1-34 |
| 02 THUR | லூக்கா / LUKE 15:1-32 | லூக்கா /LUKE 16:1-31 |
| 03 FRI | லூக்கா / LUKE 17:1-37 | லூக்கா /LUKE 18:1-43 |
| 04 SAT | லூக்கா / LUKE 19:1-48 | லூக்கா /LUKE 20:1-47 |
| 05 SUN | சங்கீதம் / PSALMS 85 | சங்கீதம் /PSALMS 86 |
| 06 MON | லூக்கா / LUKE 21:1-38 | லூக்கா /LUKE 22:1-34 |
| 07 TUE | லூக்கா / LUKE 22:35-71 | லூக்கா /LUKE 23:1-25 |
| 08 WED | லூக்கா / LUKE 23:26-56 | லூக்கா /LUKE 24:1-53 |
| 09 THUR | யோவான் /JOHN 1:1-34 | யோவான் /JOHN 1:35-51 |
| 10 FRI | யோவான் /JOHN 2:1-25 | யோவான் /JOHN 3:1-36 |
| 11 SAT | யோவான் /JOHN 4:1-54 | யோவான் /JOHN 5:1-47 |
| 12 SUN | யோவான் /JOHN 6:1-33 | யோவான் /JOHN 6:34-71 |
| 13 MON | யோவான் /JOHN 7:1-53 | யோவான் /JOHN 8:1-30 |
| 14 TUE | யோவான் /JOHN 8:31-59 | யோவான் /JOHN 9:1-41 |
| 15WED | யோவான் /JOHN 10:1-41 | யோவான் /JOHN 11:1-57 |
| 16 THUR | யோவான் /JOHN 12:1-50 | யோவான் /JOHN 13:1-38 |
| 17 FRI | யோவான் /JOHN 14:1-31 | யோவான் /JOHN 15:1-27 |
| 18 SAT | யோவான் /JOHN 16:1-33 | யோவான் /JOHN 17:1-26 |
| 19 SUN | சங்கீதம் /PSALMS 87 | சங்கீதம்/PSALMS 88 |
| 20 MON | யோவான் /JOHN 18:1-40 | யோவான் /JOHN 19:1-42 |
| 21 TUE | யோவான் /JOHN 20:1-31 | யோவான் /JOHN 21:1-25 |
| 22 WED | அப்போஸ்தலர்/ACTS 1:1-26 | அப்போஸ்தலர் /ACTS 2:1-47 |
| 23 THUR | அப்போஸ்தலர்/ACTS 3:1-26 | அப்போஸ்தலர்/ACTS 4:1-37 |
| 24 FRI | அப்போஸ்தலர்ACTS 5:1-42 | அப்போஸ்தலர்/ACTS 6:1-15 |
| 25 SAT | அப்போஸ்தலர்/ACTS 7:1-60 | அப்போஸ்தலர்/ACTS 8:1-40 |
| 26 SUN | சங்கீதம் /PSALMS 89 | சங்கீதம் /PSALMS 90 |
| 27 MON | அப்போஸ்தலர்/ACTS 9:1-43 | அப்போஸ்தலர்/ACTS 10:1-48 |
| 28 TUE | அப்போஸ்தலர்/ACTS 11:1-30 | அப்போஸ்தலர்/ACTS 12:1-25 |
| 29 WED | அப்போஸ்தலர்/ACTS 13:1-52 | அப்போஸ்தலர்/ACTS 14:1-28 |
| 30 THUR | அப்போஸ்தலர்/ACTS 15:1-41 | அப்போஸ்தலர் /ACTS 16:1-40 |
| 31 FRI | அப்போஸ்தலர் /ACTS 17:1-34 | அப்போஸ்தலர் /ACTS 18:1-28 |

# ஆராதனை தியானப் பொருள்

## மே - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>May-5<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | எசேக்கியேல் 34:25-31<br>1 பேதுரு 2:1-10<br>யோவான் 20:19-23<br>சங்கீதம் 47 | அருட்பணியை வெளிப்படுத்தும் கிறிஸ்துவின் அழைப்பு<br>CHRIST'S INVITATION TO BE AN EXPRESSION OF MISSION |
| ஞாயிறு<br>May-12<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஏசாயா 40:25-31<br>அப்போஸ்தலர் 1:1-11<br>லூக்கா 24:44-49<br>சங்கீதம் 51 | தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல்<br>WAITING UPON THE HOLY SPIRIT |
| ஞாயிறு<br>May-19<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | எசேக்கியல் 37:1-14<br>அப்போஸ்தலர் 2:1-13<br>யோவான் 16:1-11<br>சங்கீதம் 104:24-35 | வாரும் தூய ஆவியாரே, எம்மைப் புத்தாக்கம் செய்தருளும்<br>COME HOLY SPIRIT, RENEW US |
| ஞாயிறு<br>May-26<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 1:1-28<br>2 கொரிந்தியர் 13:11-14<br>யோவான் 1:1-18<br>சங்கீதம் 2 | நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம்<br>WE WORSHIP THE TRIUNE GOD |